www.padippakam.com



# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

## பகுதி II

49

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருந்த காலம் முழுவதும் ஏகாதிபத்திய நலன்களுக்காக உழைக்கும்- ஒரு தரகு முதலாளித்துவக் கட்சியாக இருந்ததால், அதனால் பௌத்த சிங்கள தேசியவாதிகளின் தேவைகளைப் பூர்த்திசெய்ய முடிய

## மக்கள் விடுதலை முன்னணியின் தத்துவார்த்த தவறுகள்

வில்லை. அதனுடைய ஆட்சிக் காலத்தில் கண்டியச் சிங்களவர்கள், கரையோரச் சிங்களவர்கள் என்ற வேறுபாடுகள் அதிகரித்துக் காணப்பட்டன. கண்டிய நிலப்பிரபுக்களும் கரையோர சிறு முதலாளிகளும், ஏகாதிபத்திய எஜமானர்களுக்கு சேவை செய்து தங்களுடைய நலன்களை காத்துக்கொள்ள ஒன்றுபட்ட அதேநேரத்தில்- கண்டிய விவசாயிகளும், கரையோர மீனவர்களும், விவசாயிகளும் தங்க்ளுக்குள் பாரிய முரண்பாடுகளைக் கொண்டவர்களாக இருந்தார்கள்.

இந்த முரண்பாடுகளை நீக்கி சிங்களவர்களை ஒரு தேசிய இனம் என்ற வகையில் ஒன்றுபடுத்தி- சிங்கள தேசியவாதத்தை கட்டி எழுப்ப S.W.R.D.

## மாஸ்கோவிலிருந்து வெளியேற்றப்பட்ட ரோகண விஜயவீரா

பண்டாரநாயக்கா முயற்சி செய்தார். இந்த முயற்சியில் அவர் முழுக்க முழுக்க பௌத்த சிங்கள தேசியவாத நலனைமட்டும் குறியாகக் கொள்ளாது, சிங்களக் கிறிஸ்தவர்களையும் ஒன்றிணைத்து மதத்துக்கு அப்பாற்பட்ட இன அடிப்படையிலான சிங்கள தேசியத்தை கட்டி எழுப்ப முயன்றபோது ஒரு பௌத்த பிக்குவால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவருக்குப் பின் ஆட்சிக்கு வந்த அவரது மனைவி திருமதி. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, கணவரின் கொள்கைகளுக்கு செயல் வடிவம் கொடுக்க முற்பட்ட போதிலும் அவரால் பௌத்த சிங்கள தேசியம் என்ற வட்டத்துக்குள் மட்டுமே நிற்க முடிந்தது.

பெரும்பான்மையான சிங்கள மக்கள் பௌத்த மதத்தவர்களாக இருந்தபோதிலும், பௌத்த மதத் தலைமைத்துவம் கண்டிய நிலப்பிரபுத்துவத்தை சார்ந்து இருந்ததால் கரையோரச் சிங்களவர்கள் குறைத்து மதிக்கப்பட்டதோடு - புறக்கணிப்புக்கும் உள்ளாகி வந்தனர்.

இந்த நிலையில்; சிங்கள மக்களுக்கு மத்தியில் இருந்த இந்த முரண்பாடுகளை நீக்கி, அவர்களை ஓரணியில் திரட்டுவதற்கு ஒரு புதிய அமைப்பு (தலைமைத்துவம்) தேவைப்பட்டது. இந்தத் தேவையின் அடிப்படையில் ஜே.வி.பி. என்று அழைக்கப்படும் மக்கள் விடுதலை முன்னணி தோற்றம் பெற்றது.

இதன் நிறுவகத் தலைவரான ரோகண விஜயவீரா கரையோரச் சிங்களப் பகுதியின் (தென் பகுதி) மாத்தளை மாவட்டத்திலுள்ள தங்காலையில் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்தவர்.

இவர் 1963-64 காலப் பகுதியில் மாஸ்கோவிலுள்ள லுமும்பா பல்கலைக் கழகத்தில் கல்வி கற்றார். அந்தக் காலகட்டத்தில்- சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையில் நடைபெற்ற சர்வதேசக் கம்யூனிச இயக்கம் தொடர்பான மாபெரும் விவாதத்தில் அவர் சீன சார்பு நிலைப்பாட்டை ஆதரித்துப் பேசியதால்- மாஸ்கோ லுமும்பா பல்கலைக் கழகத்தில் தொடர்ந்து கல்வி கற்க அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

இலங்கை திரும்பிய அவர் அக்காலத்தில் சீனாவின் நிலைப்பாட்டை ஆதரித்த நா.சண்முகதாசன் தலைமையிலான இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் வாலிபர் சங்கத்தில் இணைந்து கொண்டார். அங்கு தனது தொடர்ச்சியான செயற்பாட்டின் மூலம் அச் சங்கத்தின் தலைவராவதற்கு முயற்சி செய்தார். அவரிடமிருந்த ஊசலாட்டத் தன்மைகள் காரணமாக அவர் தலைமைப் பதவிக்கு வரும் முயற்சிகள் தடுக்கப்பட்டன. இதனால் அவர் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் இருந்துகொண்டே தனக்கு ஆதரவான குழுவை திரட்ட ஆரம்பித்தார்.

இந்த நிலையில் 1966-ம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ம் திகதி டட்லி- செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் அதனுடன் இணைந்திருந்த பாராளுமன்ற இடதுசாரிகளும் நடத்திய இனவாத (மசாலவடை) ஊர்வலத்தில் ரோகண விஜயவீரா கலந்து கொண்டார்.

தமிழ் மக்களுக்கு எதிரான இந்த ஊர்வலத்தில் கட்சியின் கட்டுப்பாட்டை மீறிக் கலந்து கொண்டதற்காக ரோகண விஜயவீராவும், அவரது ஆதரவாளர்களான சிலரும், கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

அவ்வாறு வெளியேற்றப்பட்ட அவர்- தன்னுடைய சகாக்களோடு சேர்ந்து 1966 பிற்பகுதியில் மக்கள் விடுதலை முன்னணியை உருவாக்கினார். இக்கட்சி மார்க்சிச லெனினிச அடிப்படையில் உருவாக்கப்பட்ட கட்சி என்று சொல்லப்பட்டபோதிலும் மார்க்சிசம் - லெனினிசம் - மாவோ இசம், காஸ்ரோ இசம், சேகுவேரா இசம் என்பவற்றை 'சிங்கள தேசியவாத நலனுக்கு ஏற்றவகையில் கலந்த ஒரு கலவைக் கொள்கையை' கொண்டதாகவே இருந்தது.

இக் கட்சியின் உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் 1955-66 வரை இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான இனவாதம் கட்டவிழ்த்து விடப்பட்ட காலத்தில் பிறந்து பௌத்த சிங்களப் பாடசாலைகளில் கல்வி கற்றவர்களாக இருந்தார்கள்.

ஜே.வி.பி. உறுப்பினர்களுக்கு அரசியல் போதனையளிப்பதற்காக 5 பாடத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. இதில் 5-வது பாடம் இந்திய விஸ்தரிப்பு வாதம்' என்ற பாடமாகும்.

இந்த இந்திய 'விஸ்தரிப்பு வாதம் இந்திய மூலதன விரிவாக்கத்தின் ஒரு அம்சமாக பார்க்கப்பட்டது.



இந்தியா தன்னைச் சூழவுள்ள நாடுகளில் தனது பொருளாதார இராணுவ விரிவாக்கக் கொள்கைகள் மூலம் தன்னுடைய ஆளுமையைச் செலுத்தி- தன்னை ஒரு பிராந்தியப் பொலிஸ்காரனாக ஆக்க முயல்வது. அனைத்து மக்களுக்கும் எதிரான ஒன்றே. ஆனால் ஜே.வி.பி. அதை சிங்கள மக்களுக்கு மட்டும் எதிரான ஒன்றாகப் பார்த்ததும் அந்த இந்திய விஸ்தரிப்புவாதத்தின் 'அங்கமாக' தமிழ் மக்களையும் மலையகத் தோட்டத் தொர்ழிலாளர்களையும் பார்த்ததும்- அதனுடைய மோசமான தத்துவார்த்த தவறாகும். இந்தத் தவறுக்கு அடிப்படை அந்த அமைப்புக்குள் மேலோங்கியிருந்த சிங்கள தேசியவாத நலன்களே.

**- நக்கீரன்**

## ஓர் வேண்டுகோள்...

இந்தத் தொடரின் இரண்டாவது பகுதி விரைவில் முடிவடைய உள்ளது. இதன் மூன்றாவது பகுதியில் விடுதலை இயக்கங்களின் தோற்றம்; அரசியல் இராணுவ மூலோபாயங்கள் தொடர்பாக அவை விட்ட தவறுகள்; தமிழர் விடுதலைக் கூட்டணியின் துரோகத்தனங்கள்; தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இந்தியாவின் தலையீடு; அதில் இடம்பெற்ற துரோகத்தனங்கள் என்பவற்றை விமர்சன அடிப்படையில் எழுத உத்தேசித்துள்ளேன்.

1972 வரை உள்ள வரலாற்றை எழுதுவதற்கு நிறைய சான்றாதாரங்கள் மற்றும் வரலாற்று நூல்கள் இருப்பதுபோல் 1972 க்கும் 1998 க்கும் இடைப்பட்ட கால வரலாற்றைச் சொல்வதற்கு வேண்டிய சான்றாதாரங்களும், தரவுகளும் மிகக் குறைவாகவேயுள்ளன.

ஒரு காலகட்டத்தில் குறிப்பாக 1977 - 87 காலகட்டத்தில் தமிழீழ விடுதலையை நோக்கமாகக் கொண்டு பல்வேறு அமைப்புக்களில் இணைந்து செயற்பட்ட பலர், பல்வேறு காரணங்களினால் இன்று புகலிட நாடுகளுக்கு புலம் பெயர்ந்து வந்திருக்கின்றார்கள். சிறீலங்காவின் பௌத்த சிங்கள பெருந்தேசியவாத வெறித்தனத்துக்கு எதிராகப் போராடுவதிலும் தமிழீழ தேசியத்தை நிலைநிறுத்திக் காப்பதிலும் தமிழீழ தேசத்தை சிறீலங்காவின் ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிப்பதிலும் தங்களது தலைமைகள் விட்ட தவறினால் தங்களுடைய அர்ப்பணிப்புக்கள் அர்த்தமற்றுப்போய்விட்டதாக எண்ணி தங்களுக்குள்ளேயே ஒரு குற்ற உணர்வைச் சுமந்துகொண்டு சமூகத்துடன் ஒட்டாமல் அந்நியப்பட்டுப்போய் வாழுகின்ற நிறையப்பேர் இங்குள்ளனர்.

வெளியே பலருக்குத் தெரியாத துரோக வரலாறுகள் இந்த இளைஞர்களுக்குள் புதைந்து கிடக்கின்றன. இந்த இளைஞர்கள் தங்கள் மௌனத்தைக் கலைத்து-தங்களுக்குள் புதைந்து கிடக்கும் வரலாற்றுத் தகவல்களை தந்துதவ வேண்டும் என்பது எனது விருப்பமாகும்.

ஏனெனில் மந்திரிப் பதவிக்காகவும், பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளுக்காகவும், நகர முதல்வர். நகரசபைத் தலைவர் பதவிகளுக்காகவும் இனத்தையே காட்டிக் கொடுக்கத் துணிந்துவிட்ட, விலை பேசி விற்கத் துணிந்துவிட்ட துரோகத் தலைமைகளின் அசிங்கமான துரோக வரலாற்றை பதிவு செய்து அவர்களைத் தோலுரித்துக் காட்டுவது ஒரு வரலாற்றுத் தேவை மட்டுமல்ல; அது நமது தேசத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கும் தேசிய விடுதலைப் போராட்டத்திற்குத் துணைபுரியும் செயற்பாடாகவும் அமையும்.

இத்தகைய- தகவல்கள் செய்திக் குறிப்புகள், புகைப்படங்கள் இது சம்பந்தமான சிறு நூல்கள் அல்லது வெளியிடாமல் இருக்கும் கையெழுத்துப் பிரதிகள் வைத்திருப்பவர்கள் எனக்குத் தந்துதவினால் இத்தொடரை திறம்பட எழுதுவதற்கு பேருதவியாக இருக்கும்.

(தேவைப்பட்டால் அவை பத்திரமாக திருப்பி அனுப்ப ஏற்பாடு செய்யப்படும்.)

இவ்வாறான தகவல்களை தந்துதவ விரும்புவோர்

'காக்கை வன்னியன்'
EELAMURASU
22, Rue Perdonnet, 75010 Paris, France

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

அடுத்தவாரம் முதல் காக்கை வன்னியன் தொடரில்- வாசகர்களின் வரலாறு தொடர்பான கேள்விகளுக்கும் விமர்சனங்களுக்கும் பதில் தருவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. வாசகர்கள் காக்கை வன்னியன் தொடர் தொடர்பான கேள்விகளையோ- விமர்சனங்களையோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

படிப்பகம்